சுருக்கம்

நிலம் – ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், மேட்டுப்பாளையம் கிராமம், மஜரா மேட்டுநாகுவம்பாளையம், ரீ.ச.எண்.82/13, நத்தம் புல எண்.299/1–இல் 10 சென்ட் மேட்டுநாகுவம்பாளையம் கிராம ஊராட்சிமன்ற அலுவலக கட்டடம் அமைக்க தடையாணையிலிருந்து நீக்கம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை,
நிலமுடிவு அலகு நிலமுடிவு 4(2) பிரிவு

அரசாணை (நிலை) எண்.404

நாள்: 15.06.2021
பிலவ வருடம், ஆனி 1
திருவள்ளுவராண்டு 2052

படிக்க:

1. மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு கடித எண்.உ1/16860/2020, நாள் 05.10.2020.
2. முதன்மைச் செயலர்/நிலநிருவாக ஆணையர் கடித எண்.வி1/886924/ 2020, நாள் 08.02.2021.

------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், மேட்டுநாகுவம்பாளையம் கிராமம், மஜரா மேட்டுநாகுவம்பாளையம் ரீ.ச.எண்.82/13, நத்தம் புல எண்.299/1–இல் "சர்க்கார் புறம்போக்கு காலனி" வகைபாடு நிலத்தில் 10 சென்ட் நிலம் மேட்டுநாகுவம்பாளையம் கிராம ஊராட்சிமன்ற அலுவலக கட்டடம் அமைக்க தடையாணைப் புத்தகத்திலிருந்து நீக்கம் செய்ய ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் முதன்மை செயலர்/நிலநிருவாக ஆணையர் பின்வரும் விவரங்களைத் தெரிவித்துள்ளார்:–

நிலமாற்றப் புலமானது சர்க்கார் புறம்போக்கு காலனி என கிராமப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. "அ" பதிவேடு மற்றும் அடங்கல் நகல் இணைக்கப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அலுவலர் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. உட்பிரிவு ஆவணங்கள் மற்றும் கூட்டு புல வரைபடம் நகல் இணைக்கப்பட்டுள்ளது. மேட்டுநாகுவம்பாளையம் ஊராட்சிமன்ற தீர்மான எண்.186/2020–21, நாள் 31.08.2020–இன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்படி புலமானது மாவட்ட ஆட்சியர் அவர்களின் நி.மு.எண்.86791/89, நாள் 24.05.1990–இன்படி தடையாணைப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. (தற்போது மேற்படி புலம் காலியிடமாகயுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது).

3. தடையாணைப் புத்தகத்திலிருந்து நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்ட புலத்தின் மதிப்பினை பின்வருமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் வரையறை செய்துள்ளார்:–

வழிகாட்டி மதிப்பின்படி

| | |
|---|---|
| 1 சதுர அடியின் மதிப்பு | = ரூ.201/– |
| 1 ச.மீ.மதிப்பு | = ரூ.2,165/– |
| தடையாணை நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள 0.04.05 ஹெக்டேர் (10 சென்ட்)–இன் மதிப்பு | = ரூ.8,76,825/– |

4. ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், மேட்டுநாசுவம்பாளையம் கிராமம், மஜரா மேட்டுநாசுவம்பாளையம் ரீ.ச.எண்.82/13, நத்தம் புல எண்.299/1–இல் "சர்க்கார் புறம்போக்கு காலனி" வகைபாடு நிலத்தில் 10 செண்ட் நிலம் மேட்டுநாசுவம்பாளையம் கிராம ஊராட்சிமன்ற அலுவலக கட்டடம் அமைக்க, தடையாணைப் புத்தகத்திலிருந்து நீக்கம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

5. ஈரோடு மாவட்ட ஆட்சியரின் பரிந்துரை அறிக்கையினை ஏற்று, ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், மேட்டுநாசுவம்பாளையம் கிராமம், மஜரா மேட்டுநாசுவம்பாளையம் ரீ.ச.எண்.82/13, நத்தம் புல எண்.299/1–இல் "சர்க்கார் புறம்போக்கு காலனி" வகைபாடு நிலத்தில் 10 செண்ட் நிலம் மேட்டுநாசுவம்பாளையம் கிராம ஊராட்சிமன்ற அலுவலக கட்டடம் அமைக்க தடையாணையிலிருந்து நீக்கம் செய்ய முதன்மைச் செயலர் / நிலநிருவாக ஆணையர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

6. மாவட்ட ஆட்சியர், ஈரோடு, முதன்மைச் செயலர்/நிலநிருவாக ஆணையர் ஆகியோர்களின் பரிந்துரைகளை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று, ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டம், மேட்டுநாசுவம்பாளையம் கிராமம், மஜரா மேட்டுநாசுவம்பாளையம் ரீ.ச.எண்.82/13, நத்தம் புல எண்.299/1–இல் "சர்க்கார் புறம்போக்கு காலனி" வகைபாடு நிலத்தில் 10 செண்ட் நிலம் மேட்டுநாசுவம்பாளையம் கிராம ஊராட்சிமன்ற அலுவலக கட்டடம் அமைக்க தடையாணைப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6–இல் காணும் ஆணைக்கேற்ப, உரிய மேல் நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு, ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நிலநிருவாக ஆணையர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இது தொடர்பாக வருவாய் ஆவணங்களில் உரிய திருத்தங்களை ஒரு மாத காலத்திற்குள் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு மாவட்டம்.
நகல்
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (அ.ந.மு.2) துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அவர்களின் முதன்மை தனிச்செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

R. [signature]
பிரிவு அலுவலர்.
23/4/21